FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**This question paper consists of 31 questions and 8 printed pages.**

* 8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

**Roll No.** | | | | | | | | | | | | | **Code No. 46/S/A/TM**

# TAMIL
# (தமிழ்)
# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ______

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : 1. ______

2. ______

**I. பொதுக்குறிப்புகள் :**

1 தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2 வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3 பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

4 பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

5 வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

6 உங்களது வினாத்தாளின் எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**பொதுக்குறிப்புகள் :**

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# TAMIL
# (தமிழ்)
# (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

**குறிப்பு :** **(1)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

**(2)** வினாக்களை நன்கு புரிந்து கொண்டு விடையளிக்க.

**(3)** விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக **1×11=11**

**1** இயற்கை வளம் ஒங்குவதால் மக்கள் .................. செழிக்கும்

(A) தொகை (B) நலம்

(C) மனம் (D) உடல்

**2** மராட்டியருக்கு எதைப் பரிசளிக்க பாரதி விரும்புகிறார் ?

(A) கேரள மாநிலம் (B) கோதுமை

(C) கேரளத்து யானைகள் (D) கட்டித் திரவியங்கள்

**3** வானரம் என்றால்

(A) ஆண் குரங்கு (B) ஆண் மயில்

(C) பெண் குரங்கு (D) பெண் மயில்

**4** இந்திரனை வென்றவன்

(A) கள்வன் (B) சம்பரன்

(C) வேடன் (D) தசரதன்



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

5 தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்காகக் காந்தி ஆரம்பித்த ஸ்தாபனத்தின் பெயர்

(A) தேசிய இயக்கம் (B) இந்திய தேசிய காங்கிரஸ்

(C) நேட்டால் இந்திய காங்கிரஸ் (D) பிரிட்டோரியா விடுதலை இயக்கம்

6 கேளிர் என்ற சொல்லின் பொருள்

(A) கேளுங்கள் (B) நண்பர்

(C) கேட்காதீர் (D) உறவினர்

7 சந்திர குப்தன் அரசவைக்கு வந்த கிரேக்க தூதர்

(A) அசோகன் (B) எச். ஜி. வெல்ஸ்

(C) பிந்துசாரன் (D) மெகஸ்தனிஸ்

8 பள்ளிகள் கற்றுத் தருவதென்ன ?

(A) உத்தரவுகளுக்கு உடனே கீழ்ப்படிய வேண்டும்.

(B) நன்றாகப் படிக்க வேண்டும்.

(C) உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியக் கூடாது.

(D) நன்றாகப் படிக்க வேண்டும்.

9 சிறந்த மனிதன் எத்தனை இயக்கங்களுக்கு ஒரு முறை தவறு செய்கிறான் ?

(A) 2000 (B) 1000

(C) 1500 (D) 3000

10 தண்டலை என்பது யாது ?

(A) குறிஞ்சி நிலம் (B) முல்லை நிலம்

(C) மருத நிலம் (D) நெய்தல் நிலம்

11 இரட்டைக் கிளவிக்கு எடுத்துக்காட்டு

(A) ஓடு ! ஓடு ! (B) கலகல

(C) அக்கம் பக்கம் (D) தீ ! தீ ! தீ !



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

12 கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

உலகில் ஏறக்குறைய அறுபதாயிரம் தாவரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் நாம் உணவாகப் பயன்படுத்தும் தாவரங்கள் எல்லாம் மருத்துவக் குணங்கள் கொண்டவை. அவற்றை முறையாகப் பயன்படுத்தினால் மருந்து என ஒன்று தனியாகத் தேவைப்படாது. உயிர் வாழ உணவு இன்றியமையாதது. உணவு உடல் வளர்ச்சிக்கு உதவுகின்றது; தேய்ந்து போகும் திசுக்களைப் புதுப்பிக்கின்றது. ஆகவே எல்லாச் சத்துகளும் கிடைக்கும்படியாக நம் உணவுப் பழக்கம் அமைய வேண்டும். ஆனால் இன்று நாம் நாகரிகம் என்னும் பெயரால் மேற்கத்திய உணவு முறைகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளோம். அவை கொழுப்புச் சத்தையே அதிகம் கொண்டுள்ளன. குளிர் நாடுகளான மேற்கத்திய நாடுகளுக்கு அவை பொருத்தமானவையாக இருக்கலாம். ஆனால் வெப்பம் மிகுந்த நம் நாட்டுச் சூழலுக்கு நார்ச் சத்தும் நீர்ச்சத்துமே மிகவும் தேவை. அவை அவ்வுணவுகளில் கிடைக்காது. விரைவு உணவகங்களுக்குச் சென்று சாப்பிடுவது, பொட்டலப் படுத்தப்பட்ட உணவுகளை உண்பது, புட்டிகளில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை அருந்துவது தவறு. இவற்றில் உள்ள கொழுப்புச் சத்தும் சுவையூட்டச் சேர்க்கப்படும் வேதிப் பொருள்களும் உடலுக்கு ஊறு விளைவிப்பவையே. எனவே காசைக் கொடுத்து நோயை வாங்குவது அறிவுடைமை ஆகாது.

வினாக்கள் :

(1) மருந்து என ஒன்று எப்போது தனியாகத் தேவைப்படாது ? 3
(2) நம் நாட்டுச் சூழலுக்கு எவ்வகை உணவுகள் தேவை ? 2
(3) உணவு எதற்குப் பயன்படுகிறது ? 2
(4) மேற்கத்திய உணவுகளில் என்ன வகை சத்து அதிகம் உள்ளது ? 1
(5) எது தவறு என்று கட்டுரை குறிப்பிடுகின்றது ? 2
(6) எது அறிவுடைமை ஆகாது என்கிறார் ஆசிரியர் ? 2

13 பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

கொலை மறுக்கும் வீரதீரக் கொள்கை
சொல்லும் பொன்மொழி
கொடியவர்க்கும் நன்மை செய்யக்
கூறுகின்ற இன்மொழி
அலைமிகுந்த வறுமை வந்தே
அவதி யுற்ற நாளிலும்
ஐயமிட்டு உண்ணுகின்ற
அறிவு சொல்லும் தமிழ் மொழி !

வினாக்கள் :

(1) தமிழ் மொழி பொன் மொழி என்று அழைக்கப்படக் காரணம் என்ன ? 2
(2) தமிழ் மொழியை இனிய மொழி என்று ஏன் கூறுகின்றோம் ? 2
(3) தமிழ் மொழி தரும் அறிவுரை யாது ? 2



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

14 நாவல் என்றால் என்ன ? 1

15 மௌரிய ஆட்சியின் நினைவுச் சின்னமான அசோகர் தூண் எங்குக் காணப்படுகிறது ? 1

16 உலகோர் மதிக்க எவ்வாறு வாழ வேண்டும் ? 1

17 இராம இலக்குவர்கள் தசரதனை விட்டுப் பிரிந்து செல்வதற்குக் கம்பர் கூறும் உவமையை விளக்குக. 1

18 தமிழில் மொழி பெயர்க்க. 1

(1) Credit (2) Internet.

19 (அ) சேர்த்து எழுதுக : $4 \times \frac{1}{2} = 2$

(i) கசடு + அற

(ii) மணல் + கேணி

(iii) முகம் + அத்து + இரண்டு

(iv) எழுத்து + என்ப

(ஆ) பிரித்து எழுதுக : $4 \times \frac{1}{2} = 2$

(i) மாடல்ல (ii) சென்றிரப்பர்

(iii) செறுத்துடன் (iv) கைமிகந்தாராகி

(இ) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. 2

(1) முயற்சி வெற்றியைத் தரும். ................. தோல்வியைத் தரும்.

(2) கல்விச் செல்வம் நிலையானது. பொருட் செல்வம் ............... .



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. 2

(1) உழுங்கை (2) நுரவல்

(3) பேணுதல் (4) இழவு

20 பின்வரும் மரபுச் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) தலைமறைவு

(2) கை கொடுத்தல்

21 பண அஞ்சலின் முதல் பகுதியில் யாருடைய முகவரி இடம் பெறும் ? 1

22 விளையாட்டு வீரர் ஒருவரைப் பேட்டி கண்டு எழுதுக. 4

23 வேற்றுமையைப் போக்கும் வழியினைப் பூங்குன்றனார் பாடல் வழி விளக்குக. 5

24 அம்மை தடுப்பூசி முகாம் நடைபெறும் என்பது குறித்த அறிவிப்பினை எழுதுக. 5

**அல்லது**

தமிழ்க் கோவில்களில் தமிழிலேயே அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்பது குறித்து அரசு கொடுத்த அறிவிப்பினை எழுதுக.

25 (அ) பரந்த-பறந்த பொருள் வேறுபாடு கூறி தொடரில் அமைத்து எழுதுக. 2

(ஆ) குழறுதல்-உறுமுதல் என்னும் ஒலிகள் எவ்விலங்குகளுக்குரியவை ? 2



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

26 உமது பள்ளித் தமிழ் இலக்கிய மன்றம் நடத்தும் போட்டிகள் குறித்த செய்திகளை அறிவிப்புப் பலகையில் இடம் பெறுமாறு அட்டவணை தயாரிக்க. 5

**அல்லது**

உமது முகவரி கண்ணன்/கண்ணகி, 28 மேற்கு ரத வீதி, மதுரை என்றும், உமது வங்கிக் கணக்கு எண் 9218765430 என்றும் கொண்டு 2000 ரூபாய் எடுப்பதற்காக வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்க.

ATM மனுச் செய்து விட்டீர்களா

பாரத ஸ்டேட் பாங்கு

சேமிப்பு கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம்

நாள் : ..............................

கணக்கெண் : ..............................

எனக்கு மட்டும் (எழுத்தால் எழுதுக) ..............................

.............................. ரூபாய் வழங்கவும்.

ரூ.

அடையாள வில்லை எண் : ..............................

பட்டியல் எண் : ..............................

பணம் வழங்குக
அனுமதிக்கும் அதிகாரி

கணக்கு வைத்திருப்பவர் பெயர் :

முகவரி : ..............................

தொலைபேசி எண் : ..............................

கணக்கு வைத்திருப்பவர் பெயர் : ..............................

கையொப்பம் : ..............................



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

27 பஞ்சாயத்துத் தலைவரின் பண்புகளை மனித மரங்கள் நாடகம் வழி விளக்குக. 5

**அல்லது**

தீய பழக்கம் உள்ளவரிடமும் நல்ல குணங்கள் இருக்கும் என்பதைச் சங்குத் தேவன் மூலமாக விவரிக்க.

28 பிழை திருத்தம் செய்க : 5

(1) சிரு தூறும்பும் பன் குத்த உதவும்.

(2) சேவல் கத்தியது.

(3) கயல்விழியும் மாடும் வந்தது.

(4) தன்னிலவு வாணில் உலா வந்தது.

(5) நின்;கவநி;புறப்படு.

29 நும் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற தொடக்க விழா பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுக. 7

**அல்லது**

நீவிர் வாழும் பகுதியில் மின்விளக்கு வசதி கோரி மின்வாரிய ஆணையருக்கு விண்ணப்ப கடிதம் ஒன்று எழுதுக.

30 ஏதேனும் ஒரு தலைப்பில் நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. 5

அ. சிக்கன வாழ்வு.

ஆ. பொங்கல் விழா.

இ. தொழிற்கல்வியின் அவசியம்.

31 ஏதேனும் ஒரு தலைப்பில் இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 10

அ. நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு

ஆ. அறிவியல் வளர்ச்சி

இ. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

---



www.FirstRanker.com